முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1590

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.02.2024,** திங்கட்கிழமை

1. பேரிடரை வென்று பிரளயத்தையும் அகற்றி
   பேருலகை ஞான உலகமாக மாற்ற
   ஆறுமுகன் என் அவதாரமாக வந்த
   அண்ணலே அரங்கமகா ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் தை மாதம் 22ம் நாள், 05.02.2024, திங்கட்கிழமை)
   இனிமைகொண்டு அரங்கன் உன்னுள் யான்
   எக்கணமும் பேராற்றலாய் கலந்து நிற்க
3. நிற்கவே அரங்கனுக்கு சர்வபலமும்
   நிலவுலகில் அரங்கன் தொண்டர்களுக்கு சதா பெருந்துணையும்
   துணையாக இருந்து ஆறுமுகன் யான்
   தொடர்ந்து அற்புதம் நடத்தி வருகின்றேன்
4. இணையில்லா ஓங்காரக்குடிலை நோக்கி
   இவ்வுலக மக்கள் தொடர்ந்து வந்தால் போதும்
   துணையாக ஆறுமுகன் யான் உடனிருந்து
   துரிதகதி அவர்கள் வினை போக்கி
5. வினைபோக்கி இந்த உலகில் ஞானவான்களாக
   வீறு நடைபோட்டு இனிதே அரங்கன் தேடுகின்ற
   தேடுகின்ற ஞானயுகமாற்றத்தையும்
   தேசிகன் தேர்வு செய்கின்ற ஞானிகளாகவும்
6. இடரை வெல்கின்ற ஞான ஆட்சியையும்
   இவ்வுலகில் உலகோர் அரங்கன் வழி கண்டு இனிதே
   இனிதே அற்புதம் பெறுவர் என்பேன்
   இணையில்லா இந்த அரங்கன் சன்மார்க்கம்

7. துணையாக இருக்கும் மக்களெல்லாம்
தெய்வீக நிலையில் மேல்நிலை பெற்று இனிதே
இனிதே அரங்கனால் ஞானிகளாக
என் அருள்காட்சி தயவு கூடி

8. கனிவேலவன் யான் உருவாக்கும்
ஞானஆட்சியில் கட்டாயம் இவர்களெல்லாம்
அங்கத்தினர்களாக சிறக்க நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—